අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2024 (2025)
**கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை - 2024 (2025)**
General Certificate of Education (Ord. Level) Examination - 2024 (2025)

# අනුහුරු ප්‍රශ්න පත්‍රය (தமிழ் மொழி)
## பயிற்சி வினாத்தாள்
## Practice Paper

# පුරවැසි අධ්‍යාපනය
# Civic Education - குடியியற் கல்வி



අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு - மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
*Ministry of Education, Higher Education and Vocational Education –National Languages and Humanities Branch*
The National e-learning Portal for the General Education

ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

| 62 | T | I,II |
|---|---|---|

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civics Education I, II

අධ්‍යාපන සාමාන්‍ය සහතික (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2024 (2025)
General certificate of Education (ord. Level) Examination - 2024 (2025)

*පැය තුනයි*
*மூன்று மணித்தியாலயம்*
*Three Hours*

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
பயிற்சி வினாத்தாள்
**Practice Paper**

අමතර කියවීමේ කාලය - විනාඩි 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 Minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

# குடியியற் கல்வி - I

**கவனிக்க:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உங்களுக்கு வழங்கப்படும் விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. 'வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலைமை சுதந்திரமாகும்' இக்கூற்று,
   (1) பேராசிரியர். கானர் அவர்களினதாகும்.
   (2) அரிஸ்டோட்டில் அவர்களினதாகும்.
   (3) ஜீ.டீ.எச். கோல் அவர்களினதாகும்.
   (4) ஆபிரகாம் லிங்கன் அவர்களினதாகும்.

2. சமஸ்டி அரசுகளில் செயற்படுத்தப்படும் பிராந்திய ஆட்சி அலகுகளில் 'கென்ரன்' என அறியப்படும் நாடு,
   (1) சுவிட்சர்லாற்து (2) இந்தியா (3) சீனா (4) ஐக்கிய அமெரிக்கா

3. இலங்கையின் பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் வெற்றிகரமான ஆட்சிக்கு தேவையான அரசக் கொள்கையைத் தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதை அறிமுகம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு,
   (1) நல்வாழ்க்கை (2) நல்லிணக்கம் (3) சகவாழ்வு (4) நல்லாட்சி

4. சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விரைவு தொலைபேசி இலக்கமாவது,
   (1) 1990 (2) 1929 (3) 1954 (4) 1919

5. இலங்கையின் வடக்கு இரயில் மார்க்கத்தின் அபிவிருத்திக்கு உதவி வழங்கிய நாடு,
   (1) ஈரான் (2) சீனா (3) ஜப்பான் (4) இந்தியா

6. ஒழுக்க ரீதியான கடமைக்கு உதாரணமாக அமைவது,
   (1) நடைமுறையில் உள்ள சட்டத்தை மதிப்பதாகும்.
   (2) அரசியல் யாப்பினை பாதுகாப்பதாகும்.
   (3) அரசுக்கு உரிய வரியினைச் செலுத்துவதாகும்.
   (4) மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படுதலாகும்.

7. நாடொன்றின் உள்ளக மோதல்களானது,
   (1) இனத்துவ மோதல், அரசியல் மோதல் என வகைப்படும்.
   (2) கருத்தியல் மோதல், சிவில் மோதல் என வகைப்படும்.
   (3) வெளிப்படையான மோதல், நுண்மையான மோதல் என வகைப்படும்.
   (4) மதம்சார்ந்த மோதல், இனத்துவ மோதல் என வகைப்படும்.

8. இலங்கையின் உள்ளக சுயாட்சிக்கான வாய்ப்பினை வழங்காதவாறு 1833, 1910, 1924ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தியவர்கள்,

   (1) ஒல்லாந்த இனத்தவர் (2) போர்த்துகீச இனத்தவர்
   (3) பிரான்சிய இனத்தவர் (4) பிரித்தானிய இனத்தவர்

9. இலங்கைக்கான தொழிற் சந்தையை உருவாக்கும் போது அதிக பங்களிப்பு வழங்கும் நாடுகள் இரண்டினை உள்ளடக்கிய விடையாக அமைவது,

   (1) தென்கொரியா மற்றும் ஜப்பான் (2) பிறேசில் மற்றும் இத்தாலி
   (3) ருமேனியா மற்றும் கஜகஸ்தான் (4) சீனா மற்றும் மெக்சிகோ

10. ஆட்சிமுறை என்ற வகையில் 'சனநாயக ஆட்சி முறை' முக்கியம் பெறுவது,

   (1) ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதாலாகும்.
   (2) மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் நடைபெறுவதாலாகும்.
   (3) சமத்துவத்திற்கு மதிப்பளிப்பதாலாகும்.
   (4) கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களுக்கு வருவதாலாகும்.

11. 'வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்தல்' எனும் கோசத்தின் கீழ் அபிவிருத்தியை நோக்கிச் சென்ற நாடுகள் இரண்டு,

   (1) சிங்கப்பூர் மற்றும் பின்லாந்து
   (2) சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்து
   (3) சுவிட்சர்லாந்து மற்றும் மலேசியா
   (4) சுவிட்சர்லாந்து மற்றும் பாகிஸ்தான்

12. இடைநிலைப்பொருள், நுகர்வுப்பொருள் மற்றும் மூலதனப்பொருள் சரியான ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையாவது,

   (1) பசளை, அரிசி மற்றும் வாகனம் (2) வாகனம், அரிசி மற்றும் பசளை
   (3) மருந்து, இயந்திரம் மற்றும் பசளை (4) பசளை, இயந்திரம் மற்றும் சீனி

13. நவ தாராண்மைவாத முதலாளித்துவ பொருளாதார முறையின் பண்பாவது,

   (1) உற்பத்திக் காரணிகள் பொதுவுடைமையாக்கப்படல்.
   (2) ஆட்சி சட்டத்திட்டங்கள், வரையறைகள் அதிகரிக்கப்படல்.
   (3) தனியார் துறையினரை உற்சாகப்படுத்தல்.
   (4) அரசின் நேரடி தலையீடு காணப்படல்.

14. 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு ஏற்ப, உயர் நீதிமன்றத்தின் விசேட அதிகாரங்களில் ஒன்று,

   (1) பொதுத் தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்வதாகும்.
   (2) ரிட் கட்டளைகளைப் பிறப்பிப்பதாகும்.
   (3) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதாகும்.
   (4) இராணுவ அதிகாரத்தை பயன்படுத்துவதாகும்.

[பக் 3ஐப் பார்க்க]

15. பெண்களுக்கெதிரான அனைத்துவித பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையில் (CEDAW) இலங்கை கைச்சாத்திட்ட ஆண்டு,

(1) 1993 (2) 1979 (3) 1980 (4) 1981

16. இலங்கையின் உள்ப@ராட்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளில் அடங்குவது,

(1) பொதுச் சந்தைகளை நடாத்திச்செல்லல் (2) வீதிகளை பராமரித்தல்
(3) பாதிப்பான கட்டடங்களை அகற்றுதல் (4) பொது மலசலகூடங்களை பராமரித்தல்

17. நாடொன்றில் அரசியல் யாப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் அறியப்படுவது,

(1) மனித உரிமைகள் என்றாகும். (2) அடிப்படை உரிமைகள் என்றாகும்.
(3) அரசியல் உரிமைகள் என்றாகும். (4) சிவில் உரிமைகள் என்றாகும்.

18.தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைய சுற்றாடல் பாதுகாப்புப் தொடர்பில் இலங்கையில் நடைமுறையிலுள்ள பிரதான நிறுவனமாக அமைவது,

(1) மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகும். (2) சுற்றாடல் அமைச்சு ஆகும்.
(3) வனப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகும். (4) கடல்சார் பாதுகாப்பு அதிகாரசபை ஆகும்.

19.இலங்கையில் மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரையிலான நிருவாக அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ள படிமுறையினை தெரிவுசெய்க.

(1) மாகாணம், தேசிய, மாவட்டம், கிராம அலுவலர்
(2) தேசிய, மாகாணம், பிரதேசம், மாவட்டம்
(3) தேசிய, மாவட்டம், பிரதேசம், கிராம அலுவலர்
(4) மாவட்டம், கிராம அலுவலர், தேசிய, மாகாணம்

20. நாட்டில் உழைக்கும் மக்களுக்கான சமூக நீதியினைப் பெற்றுக்கொடுப்பததை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச நிறுவனம்,

(1) சர்வதேச மனித உரிமைகள் தாபனம் (2) சர்வதேச செஞ்சிலுவை தாபனம்
(3) உலக சுகாதார தாபனம் (4) சர்வதேச தொழிலாளர் தாபனம்

21. ஆட்சி நடவடிக்கைகளில் மக்களின் நேரடி கருத்தினை அறியும் முறையாக அமைவது,

(1) பொதுசன அபிப்பிராயத் தேர்தல் (2) சனாதிபதித்தேர்தல்
(3) பாராளுமன்றத் தேர்தல் (4) உள்@ராட்சித் தேர்தல்

22. சனநாயக ஆட்சி முறை வெற்றிபெறுவதற்குத் தேவையான அத்தியவசிய காரணியாவது,

(1) குறித்தக் காலத்தில் தேர்தல்கள் நடைபெறுதல்
(2) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடைபெறுதல்
(3) அனைவரினதும் பங்குபற்றலுடன் தேர்தல்கள் நடைபெறுதல்
(4) அமைதியான சூழலில் தேர்தல்கள் நடைபெறுதல்

23.

- சனாதிபதியால் நியமிக்கப்படும் நபராவார்.
- திறைசேரியின் மூலம் ஊதியம் வழங்கப்படுவதோடு சேவைக்காலத்தில் குறைக்கப்பட முடியாது.
- 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் எந்தவொரு பிரசையும் தமது முறைப்பாடுகளை நேரடியாக அவரிடம் முன்வைக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் மூலம் தெளிவுப்படுத்தப்படும் பிரச்சினைகளை தீர்த்தல் தொடர்பில் முக்கியமிக்க உத்தியோகத்தர்,

(1) சட்டமா அதிபர் (2) நீதி அமைச்சர்

(3) நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (4) பிரதம நீதியரசர்

24. சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்படும் நிலையான நோக்கங்களை சரியாகக் குறிப்பிடும் விடைத்தொகுதியை தெரிவுசெய்க.

(1) போசாக்கு, கல்வி, பங்குபற்றல், அபிவிருத்தி
(2) போசாக்கு, உயிர்வாழ்தல், சுகாதாரம், கல்வி
(3) பாதுகாப்பு, உயிர்வாழ்தல், அபிவிருத்தி, பங்குபற்றல்
(4) சுதந்திரம், சமத்துவம், பங்குபற்றல், கல்வி

25. பிராந்திய மட்டத்தில் செயற்படும் சர்வதேச அமைப்புகள் பெரும்பாலும் உருவாக்கப்பட்டிருப்பது,

(1) புவியியல் அமைவிடங்களை அடிப்படையாகக் கொண்டாகும்.
(2) அரசியல் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(3) தொழில்நுட்ப விருத்தியினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(4) அபிவிருத்தி மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

26. மனிதச் செயற்பாடுகளால் உருவாகும் சுற்றாடல் பிரச்சினைகளை உள்ளடக்கிய விடையாக அமைவது,

(1) மண்சரிவு, எரிமலை, உயிர்ப்பல்வகைமை பாதிப்பு
(2) புவியதிர்வு, எரிமலை வெடிப்பு, பனிமலைச் சரிவு
(3) சுனாமி, பனிமலைச் சரிவு, புவி வெப்பமடைதல்
(4) புவி வெப்பமடைதல், உயிர்ப்பல்வகைமை பாதிப்பு, பனிமலைச் சரிவு

27. சமகால உலகில் தேச எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு மோதல் உருவாகியுள்ள நாடுகள் இரண்டு,

(1) இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம்
(2) இரஸ்யா மற்றும் உக்ரேன்
(3) சோமாலியா மற்றும் எதியோப்பியா
(4) ஈரான் மற்றும் குவைட்

28. 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு ஏற்ப, மாகாண சபைகள் உருவாக்கப்படுவதற்கான சட்டமாக அமைவது,

(1) 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டமாகும்.
(2) 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க சட்டமாகும்.
(3) 1994ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க சட்டமாகும்.
(4) 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க சட்டமாகும்.

29. சனாதிபதி அரசாங்க முறையின் பண்பாவது,

(1) சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையைப் பதவி விலக்க முடியும்.
(2) நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாகப் பொறுப்புச் கூறுவதில்லை.
(3) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படல்.
(4) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையில் நேரடித் தொடர்பு காணப்படும்.

30. பன்மைச் சமூகம் ஒன்றில் வாழும்போது,

(1) பண்பாட்டுக் கலப்பிலிருந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
(2) பெரும்பாலான மக்கள் பின்பற்றும் மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.
(3) ஏனைய இனக்குழுக்களின் மொழிகளைக் கற்றுக்கொள்ளல் வேண்டும்.
(4) தமது கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

31. மோதலை தீர்க்கும் நடுநிலையாளரை தெரிவுசெய்யும்போது கவனத்தில் கொள்ள விடயமாவது,

(1) ஒரு தரப்பு மட்டும் ஏற்றுக்கொள்ளும் நபராக இருத்தல்.
(2) இரு தரப்பிற்கும் அழுத்தம் கொடுப்பவராக இருத்தல்.
(3) வெற்றி – வெற்றி தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டுபவராக இருத்தல்.
(4) தமது தீர்மானங்களை மற்றவர் மீது பலாத்காரமாக சுமத்துபவராக இருத்தல்.

32. இலங்கையின் சர்வதேச உறவுகளைப் பேணுவதற்கான சமகால முறைகளில், ஒரு அரச உபாய முறையாக மிகவும் முக்கியத்துவம் பெறுவது,

(1) தமது உற்பத்திகளை வேறு நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதாகும்.
(2) தூதுவர்கள், உயர்தானிகர்கள் ஊடாக அரச உறவுகளை உருவாக்குவதாகும்.
(3) யுத்த ரீதியாக தேவையான விசேடப் பயிற்சிகளை நாடுகளுக்கு வழங்குவதாகும்.
(4) நாடுகளை ஒன்றிணைத்து பல்வேறு பிராந்திய அமைப்புகளை உருவாக்குவதாகும்.

33. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளை உள்ளடக்கிய விடையாக அமைவது,

(1) சீனா, இரஸ்யா, ஐக்கிய அமெரிக்க குடியரசு
(2) இரஸ்யா, ஐக்கிய அமெரிக்க குடியரசு, இந்தியா
(3) பிரான்ஸ், சீனா, வடகொரியா
(4) பிரித்தானியா, இரஸ்யா, தென்கொரியா

34. 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை சரியாகக் காட்டும் விடையாக அமைவது,

(1) பொதுத் தேர்தல் மூலம் 101 பேரும் தேசிய பட்டியல் மூலம் 30 பேரும்
(2) பொதுத் தேர்தல் மூலம் 151 பேரும் தேசிய பட்டியல் மூலம் 06 பேரும்
(3) பொதுத் தேர்தல் மூலம் 168 பேரும் தேசிய பட்டியல் மூலம் 29 பேரும்
(4) பொதுத் தேர்தல் மூலம் 196 பேரும் தேசிய பட்டியல் மூலம் 29 பேரும்

35. சட்டம் தொடர்பான உண்மையான கூற்று,

(1) மாற்றமடையும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப மாறாத் தன்மை கொண்டதாகும்.
(2) சிவில் சட்டம் மாத்திரமே இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு உரியதாகும்.
(3) தனியாள் உறவுகள் குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்டதாகும்.
(4) அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மேலான சட்டம் அரசியல் யாப்பு சட்டமாகும்.

36. சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு எதிர்க்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் செயற்பாடாக **அமையாதது,**

(1) நேர்மயமான விமர்சனங்களை முன்வைத்து அரசாங்கத்தை நல்வழிப்படுத்தல்.
(2) ஆளுங்கட்சியின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
(3) ஆளுங்கட்சியின் சனநாயக விரோதக் கொள்கைகளை எதிர்க்காமை.
(4) மிகச் சிறந்த மாற்று அரசாங்கத்தை அமைப்பதற்காகச் செயற்படுதல்.

37. சனாநாயக நாடொன்றில் ‘அதிகாரம்’ என்பதன் கருத்து,

(1) அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவோர் தமக்கு விருப்பமான வகையில் அதிகாரத்திற்கு உட்படுவோரை ஆள்வதாகும்.
(2) பொருளாதாரத்தினுள் அதிகாரம் கொண்ட தரப்பினரால் ஏனையவர்களை நிருவகிப்பதற்கான முயற்சியாகும்.
(3) சமூகத்தினுள் வாழும் நபர்கள் மற்றும் காணப்படும் சமூக நிறுவனங்களை மீறி செயற்படுவதாகும்.
(4) அரசின் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவ்வரசுக்குள்ள ஆற்றலாகும்.

38. கீழுள்ள கூற்றுக்களில் நிலையான அபிவிருத்தினை அடைந்துகொள்வதற்கு அவசியமாகும் காரணிகளை உள்ளடக்கும் விடையாவது,

A - சூழல்நேய வள நுகர்வு
B - அழகியல் சார் அம்சங்களைப் பாதுகாத்தல்
C - புவியினால் தாங்கிக்கொள்ளக்கூடிய அபிவிருத்தி
D - அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் உற்பத்தி மனப்பாங்கு

(1) ABC (2) ABD (3) ACD (4) BCD

39. ‘அ’ பகுதியில் உலக நாடுகள் உருவாக்கிக் கொண்டுள்ள அமைப்புகள் மற்றும் ‘ஆ’ பகுதியில் அவற்றின் நோக்கங்களும் காட்டப்பட்டுள்ளன. இதன்படி, ‘அ’ நிரலை ‘ஆ’ நிரலுடன் பொருத்தும்போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது,

| **‘அ’** | **‘ஆ’** |
|---|---|
| 1. ஐரோப்பிய சங்கம் (EU) | A - சுதந்திர வர்த்தகம் |
| 2. வட அமெரிக்க வர்த்தக உடன்படிக்கை (NAFTA) | B - தொழிநுட்ப பரிமாற்றம் |
| 3. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA) | C - நிதிச் செயற்பாடுகளை மிகவும் முறைமைப் படுத்தல் |
| 4. பிம்ஸ்டெக் (BIMSTEC) | D - பிராந்திய வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தல் |

(1) CABD (2) CADB (3) CBAD (4) CDBA

40. கீழுள்ள ‘அ’ மற்றும் ‘ஆ’ கூற்றுக்களை அவதானியுங்கள்.

அ – மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டு மொத்த வருவாய் ஆகியவற்றின் கூட்டுமொத்தமே தலா தேசிய உற்பத்தி எனப்படும்.

ஆ – தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியில் பொருளாதார தகவல்கள் மட்டும் கருத்திற் கொள்ளப்படும்.

இக்கூற்றுக்களில்

(1) ‘அ’ கூற்றின் மூலம் ‘ஆ’ கூற்று தெளிவுபடுத்தப்படுகினற்து.
(2) ‘அ’ கூற்று பிழையானதோடு ‘ஆ’ கூற்று உண்மையானதாகும்.
(3) ‘அ’ கூற்று சரியானதோடு ‘ஆ’ கூற்று பிழையானதாகும்.
(4) ‘அ’ கூற்று மற்றும் ‘ஆ’ கூற்று ஆகிய இரண்டும் உண்மையானவையாகும்.

***

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

T I,II

62 S II

අධ්‍යාපන සාමාන්‍ය සහතික (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2024 (2025)
General certificate of Education (ord. Level) Examination - 2024 (2025)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

**குடியியற் கல்வி - II**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01.

I. உலகில் அரசாட்சிக்காக ஆரம்ப காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டுவரும் ஆட்சிமுறைகள் **இரண்டை** எழுதுக.
II. சமூகத்தில் பண்பாட்டை இயக்கும் பிரதான சக்திகள் **இரண்டினைப்** பெயரிடுக.
III. எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும்? என்ற அடிப்படை பொருளாதார பிரச்சினையில் முகங்கொடுக்க நேரிடும் உபபிரச்சினைகள் **இரண்டும்** எவை?
IV. மோதலுடன் தொடர்புடைய 'நடத்தைகள்' பிரதானமாக **இருவகைப்படும்**. அவற்றைப் பெயரிடுக.
V. குற்றவியல் சட்டத்துடன் தொடர்புடைய 'விசேட' தண்டனைகள் **இரண்டை** எழுதுக.
VI. மனித உரிமைகளின் இயல்புக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளின் **இரு** வகைகளையும் குறிப்பிடுக.
VII. சூழல் தொகுதி உள்ளடக்கியுள்ள கூறுகள் **இரண்டை** எழுதுக.
VIII. சர்வதேச வர்த்தகத்தின் பிரதான பிரிவுகள் **இரண்டைப்** பெயரிடுக.
IX. சனநாயக நாடுகளில் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பிரதிநிதித்துவ முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக.
X. மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கு பின்பற்றவேண்டிய முறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(புள்ளிகள் $2 \times 10 = 20$)

02. தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் அனைவருக்கும் பங்கெடுத்தல் ஆரம்ப காலத்திலிருந்து இடம்பெற்றதாகும்.

I. சனநாயகத்தின் ஆரம்பம் தொடர்பில் கீழேத்தேய மற்றும் மேலேத்தேய பிரதேசங்களில் நடைமுறையில் இருந்த ஆட்சி முறைகள் **இரண்டை** ஒழுங்குமுறையில் எழுதுக. (புள்ளிகள் 02)
II. சனநாயக சமூகத்தின் நிலைப்பிற்கு சுதந்திர ஊடகத்தினால் ஆற்றக்கூடிய பணிகள் **மூன்றினை** எழுதுக. (புள்ளிகள் 03)
III. (a) சனநாயக ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப்படும் நாடொன்றில் அரசியலமைப்பிற்கு ஏற்ப செயற்படுவதன் பயன்கள் **இரண்டை** எழுதுக. (புள்ளிகள் 02)
(b) மேலுள்ள (a) வில் குறிப்பிட்ட **ஒரு** பயன் நாட்டிற்கு முக்கியம் பெறும் விதத்தை சுருக்கமாக விவரிக்குக. (புள்ளிகள் 03)

03. எல்லா சமூகங்களிலும் பண்பாடானது அச்சமூகத்தின் இருப்பினை வழிநடத்தும் பிரதான சக்தியாகும்.

I. இலங்கை பன்மைச் சமூகமாவதில் செல்வாக்குச் செலுத்தும் குடிப்பெயர்வு காரணிகள் **இரண்டைப்** பெயரிடுக. (புள்ளிகள் 02)
II. பன்மைச் சமூகத்தில் நல்லாட்சிக்காக பிரசை ஒருவரால் விருத்தி செய்துகொள்ள வேண்டிய குணவியல்புகள் **மூன்றை** எழுதுக. (புள்ளிகள் 03)
III. (a) பன்மைச் சமூகத்தில் பொதுமக்கள் ஒற்றுமையாக செயற்படுவதன் பயன்கள் **இரண்டை** எழுதுக. (புள்ளிகள் 02)

[பக் 8ஐப் பார்க்க]

(b) நாடொன்றின் முன்னேற்றத்தில் மேலுள்ள (a) இல் குறிப்பிட்ட **ஒரு** விடயம் பங்களிக்கும் விதத்தை சுருக்கமாக தெளிவுபடுத்துக. (புள்ளிகள் 03)

04. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் பூகோளமயமாதல் தற்கால உலகின் பொருளாதாரத்தின் தீர்மானமிக்கதொரு காரணியாகும்.

I. சமதர்மப் பொருளாதாரப் பண்புகள் அதிகமாக வெளிப்பட்ட நாடுகள் **இரண்டைப்** பெயரிடுக. (புள்ளிகள் 02)

II. உலகமயமாக்கலால் உலகப் பொருளாதாரதத்தில் கண்டுகொள்ளக்கூடிய பண்புகள் **மூன்றினை** எழுதுக. (புள்ளிகள் 03)

III. (a) உலகமயமாதலால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சாதகமான விளைவுகள் **இரண்டை** எழுதுக. (புள்ளிகள் 02)

(b) மேலுள்ள (a) இல் குறிப்பிட்ட சாதக விளைவு **ஒன்றின்** தாக்கத்தை சுருக்கமாக விவரிக்குக. (புள்ளிகள் 03)

05. மனிதனின் வாழ்க்கைத் தரத்தினை பண்பு ரீதியாக மாற்றியமைப்பது அபிவிருத்தி எனப்படும்.

I. அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய அளவீடுகள் **இரண்டை** எழுதுக. (புள்ளிகள் 02)

II. உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (புள்ளிகள்03)

III. (a) வளங்களின் பயன்களை விருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபாயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட **ஒரு** உபாயத்தை சுருக்கமாக விளக்குக. (புள்ளிகள் 03)

06. சர்வதேச ரீதியாக நாடுகளுக்கிடையில் காணப்படும் ஒத்துழைப்பு உலகலாவிய பிரசையின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது.

I. தற்காலத்தில் பலம் வாய்ந்த நாடுகளால் பலவீனமான நாடுகள் மீது தாக்கம் செலுத்தும் துறைகள் **இரண்டை** எழுதுக. (புள்ளிகள் 02)

II. சர்வதேச உறவுகளின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்றை** எழுதுக. (புள்ளிகள் 03)

III. (a) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கூறுகளில் காணப்படும் பிரதான நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (புள்ளிகள்02)

(b) மேலுள்ள (a) இல் நிறுவனங்களின் ஒன்றின் பணிகள் **மூன்றினை** சுருக்கமாக விளக்குக. (புள்ளிகள் 03)

07. மனிதனின் வெளிநடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சமூகத்தால் இடப்படும் விதிமுறைகளே சட்டமாகும்.

I. இலங்கையில் நடைமுறையிலுள்ள பொதுச் சட்டங்களுக்கு அப்பால் நடைமுறையில் உள்ள வேறு சட்டங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (புள்ளிகள் 02)

II. அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் **மூன்றினை** எழுதுக. (புள்ளிகள் 03)

III. (a) சட்டத்தின் மேன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ள சமூகத்தில் காணக்கூடிய பண்புகள் **இரண்டை** எழுதுக. (புள்ளிகள் 02)

(b) நீதி மற்றும் நியாயமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்காக (a) இல் குறிப்பிட்ட விடயங்கிளில் **ஒன்று** பங்களிக்கும் விதத்தினை சுருக்கமாக விவரிக்க. (புள்ளிகள் 03)

***

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2024(2025)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය (தமிழ் மொழி)

# Answer Sheet for the model paper

## மாதிரி வினாத்தாளுக்கான விடைத்தாள்

# පුරවැසි අධ්‍යාපනය

## CIVIC EDUCATION - குடியியற் கல்வி




අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு - மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
Ministry of Education, Higher Education and Vocational Education –National Languages and Humanities Branch
The National e-learning Portal for the General Education

## குடியியற் கல்வி I - விடைத்தாள்

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 2 | 21 | 1 | 31 | 3 |
| 02 | 1 | 12 | 1 | 22 | 2 | 32 | 2 |
| 03 | 4 | 13 | 3 | 23 | 3 | 33 | 1 |
| 04 | 2 | 14 | 3 | 24 | 3 | 34 | 4 |
| 05 | 4 | 15 | 4 | 25 | 1 | 35 | 4 |
| 06 | 4 | 16 | 1 | 26 | 4 | 36 | 3 |
| 07 | 3 | 17 | 2 | 27 | 1 | 37 | 4 |
| 08 | 4 | 18 | 1 | 28 | 2 | 38 | 1 |
| 09 | 1 | 19 | 3 | 29 | 2 | 39 | 2 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 3 | 40 | 4 |

**(மொத்தப் புள்ளி 1 x 40 =40)**

## குடியியற் கல்வி – II – விடைத்தாள்

1.

I.

- பிரபுக்கள் ஆட்சி முறை
- சனநாயக ஆட்சி முறை
- மன்னராட்சி முறை …. வேறு

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள்)**

II.

- மதம்
- நம்பிக்கைகள்
- மரபு சம்பிரதாயங்கள்
- அறிவு
- ஒழுக்கவிழுமியங்கள் …. போன்றவாறு

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள்)**

III.

- பயன்படுத்தும் நுட்பங்கள் யாவை
- யாரால் (எத்துறையால்) உற்பத்தி செய்யப்படுகின்றது?

IV.

- ஒத்துழைப்பு சார்ந்தது
- பலாத்காரம் சார்ந்தது

V.

- செத்துக்களை அரசுடைமையாக்குதல்
- மரண தண்டனை
- சிறையில் அடைத்தல்

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள்)**

VI.

- சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்
- சமூக மற்றும் கலாசார உரிமைகள்

VII.

- உயிரற்ற கூறுகள்
- உயிருள்ள கூறுகள்
- சமூகச் சூழல்

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள்)**

VIII.

- இருதரப்பு வர்த்தகம்
- பல்தரப்பு வர்த்தகம்

IX.

- எளிய பெரும்பான்மை முறை
- விகிதாசார முறைமை
- கலப்பு முறை

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள்)**

X.

- சமய நடவடிக்கைகளில் ஈடுபடல்
- உளவியல் பயிற்சிகளில் ஈடுபடுதல்
- உளவளத்துணை சேவைகளை நாடுதல்
- இயற்கைச் சூழலை அவதானித்தல்

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள்)**

**(புள்ளிகள் 2 x 10 = 20)**

02.

I.

- இந்தியாவின் வஜ்ஜி குடியேற்றம்
- கிரேக்கத்தின் ஏதேன்ஸ்

**(புள்ளிகள் 2)**

II.

- பக்கச் சார்பற்றதும் நியாயமானதுமான தகவல் வழங்குதல்,
- உண்மையானதும் சரியானதுமான தகவல்களை வழங்குதல்,
- சரியான மக்கள் கருத்துக்களை கட்டியெழுப்புவதற்கும் செயற்படல்.
- ஆட்சியாளர்களைச் சனநாயக வழியில் இட்டுச் செல்லல்.
- மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுதல்
- நடைமுறைத் தகவல்களை உரிய நேரத்தில் மக்களுக்கு வழங்குதல்.

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

III.

(a)

- ஆட்சியின் ஒழுங்கு மற்றும் நிலைப்பு பாதுகாக்கப்படல்
- பிரசைகளின் உரிமைகள் தொடர்பில் ஆள்வோர் ஆளப்படுவோர் ஆகிய இருதரப்பும் தெளிவடைதல்
- எதேட்சையான ஆட்சி தடுக்கப்படல்
- அடிப்படை உரிமைகள் பாதுக்கப்படல்
- நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படல்

- ஆட்சி நிறுவனங்களின் மூலம் மக்கள் தமது தேவைகளையும் விரப்பங்களையும் பூர்த்தி செய்தல்
- சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் சமமாகக் கிடைத்தல்

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

(b) அதில் ஒன்று நாட்டிற்கு பயன்படும் வித்ததினை தெளிவுபடுத்த வேண்டும்.

**(புள்ளிகள் 2)**

03.

I.

- விஜயனும் தோழர்களும் வருகை தந்தமை
- விஜயனின் முடிசூட்டலுக்கு மதுராபுரி இளவரசி வருகை தந்தமை
- பண்டுவாசுதேவனும் குழுவினரும் வருகை தந்தமை
- பக்தகச்சானாவும் சகோதரக் குழுவினரும் வருகை தந்தமை
- மகிந்த தேரரும் மதத்தூதுக் குழுவினரும் வருகை தந்தமை.
- சங்கமித்தை பிக்குனியும் குழுவினரும் வருகை தந்தமை.

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள் - புள்ளிகள் 2)**

II.

- ஒவ்வொருவரினதும் பண்பாடுகளை அறிந்துகொள்ளல் மற்றும் தெளிவுடன் செயற்படல், ஏனையோருக்கு மதிப்பளித்தல்.
- பிற சமயங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமை
- பிற கலாசாரங்களை மதித்தல்
- முரண்பாடுகள் ஏற்படாத விதத்தில் செயற்படல்
- ஒற்றுமையை விருத்தி செய்தல்
- ஒற்றுமையின் மூலம் இலகுவில் வெற்றியடையலாம் என்பதைப் புரிந்துகொள்ளல்
- பிற இனத்தவர்களின் மொழிகளைக் கற்றுக்கொள்ளலும் பயன்படுத்தலும்
- சர்வமத செயற்பாடுகளை செயற்படுத்தல்
- பிறரது கருத்துக்களைச் செவிமடுத்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- சமத்துவம்

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

III. (அ)

- தேசிய ஐக்கியம் மற்றும் சகவாழ்வு விருத்தியடைதல்
- முரண்பாடுகள் குறைவடைதல்
- அந்நியோன்ய தொடர்பும் நம்பிக்கையும் விருத்தியடைதல்
- ஒரே தேசம் ஒரே நாடு எனும் உணர்வு விருத்தியடைதல்
- மனித சுதந்திரமும் சனநாயகமும் உறுதிப்படுத்தப்படல் நாட்டின் அபிவிருத்தியில் சகலரும் ஒன்றுசேர்ந்து செயற்படல் பிற சமயங்களுக்கும் பண்பாடுகளுக்கும் அகௌரவம் ஏற்படாதவகையில் செயற்படுதல்.

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

(ஆ)

- (அ) இல் குறிப்பிட்ட ஒன்று முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் விதத்தினை தெளிவுபடுத்த வேண்டும்.

**(புள்ளிகள் 2)**

04.

I.

- வடகொரியா
- கியூபா

**(புள்ளிகள் 2)**

II.

- பல்தேசியக் கம்பனிகள் தோற்றம் பெறல்
- பல்வேறு நாடுகளில் காணப்படும் வரிச் சலுகை, குறைந்த சம்பளத்திற்கான ஊதியம், தளர்ச்சியான சுற்றாடல் விதிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு முதலீடுகளை மேற்கொள்ளல்.
- திறந்த பொருளாதாரக் கொள்கையை முழு உலகிற்கும் அறிமுகம் செய்தல்
- பல்வேறு பிராந்திய ஒத்துழைப்பு ஒழுங்கமைப்புகள் நிறுவப்படல்
- தேசிய நிதி வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படல்
- உலகின் பலமிக்க நாடுகள் தமது அரசியல் அதிகாரத்தை ஏனைய நாடுகளுக்குப் பரவச் செய்தல்
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படல்
- வர்த்தகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு கட்டற்ற வர்த்தகம் உருவாக்கப்படல்.
- மூலதனத் தளம்பல் நிலை காணப்படல்
- உலக உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறல்

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 2)**

III. (அ)

- வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழில்நுட்பங்களின் உள்வருகை
- வேலை உலகில் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாவதால் வேலையின்மை குறைவடைதல்
- தேசிய உற்பத்திக் காரணிகளுக்கு அதிக கேள்வி காணப்படல்
- கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்படல்
- சர்வதேச சந்தையை மையமாகக் கொண்டு உள்ளூர் உற்பத்திகள் தோற்றம்பெறல்
- சென்மதி நிலுவை சாதகமாக அமைதல்
- பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படல்
- தரம் வாய்ந்த உற்பத்திகள் தோற்றம் பெறல்
- வெளிநாட்டு நிபுணத்துவம் கிடைப்பதால் தேசிய மனித வளம் விருத்தியடைதல்
- உற்பத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகள் பரவலடைதல்
- தேசிய வளங்களில் இருந்த உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளல்
- பாரிய கைத்தொழில்கள் நகரங்களில் இருந்து வெளிப் பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் அப்பிரதேசங்கள் விருத்தியடைதல்
- பல்வேறு பிராந்திய ஒழுங்கமைப்புகளுடன் சேரமுடிதல்
- செயற்திறனற்ற உற்பத்திகள் சந்தையில் இருந்து நீக்கப்படல்
- உள்நாட்டு நுகர்வோருக்கு உயர்தரமான பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தல்.

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

(ஆ)

- ‘அ’ குறிப்பிட்ட ஒரு தாக்கத்தை சுருக்கமாக விவரிக்க வேண்டும்.

**(புள்ளிகள் 2)**

05.

I.

- தலா தேசிய உற்பத்தி
- தனிநபருக்கான தலா தேசிய உற்பத்தி
- மொத்த உற்பத்தி
- பொருளாதார வளர்ச்சி வேகம்

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள் - புள்ளிகள் 2)**

II.

- சூழல் மாசடைதல்
- சர்வதேச பயங்கரவாதம்
- மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்
- வலுசக்தி நெருக்கடி
- சந்தைப் போட்டி
- சமூகப் பிரச்சினைகள் உக்கிமடைதல் (இணையத்தளத்தின் மூலம்)
- இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்தல்
- புதிய கைத்தொழில் மயமான நாடுகளின் சந்தைப் போட்டி

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

III. (அ)

- 3R - எண்ணக்கரு
- 5S - வினைத்திறன் எண்ணக்கரு பயன்பாடு
- CP - தூய்மையான உற்பத்தி
- GP - பசுமை உற்பத்திகள் (Green Productivity)
- TQM - முழுமைத்தர முகாமைத்துவம் (Total Quality Management)
- Poka Yoke - தவறுகளை பூச்சியமாக்குதல்
- PPP - கழிவகற்றும் பொறுப்பை உற்பத்தியாளர் ஏற்றுக்கொள்ளல்

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

(ஆ)

- மேலே (அ) இல் குறிப்பிட்ட ஒரு உபாயத்தை சுருக்கமாக விபரிக்க வேண்டும்.

**(புள்ளிகள் 2)**

06.

I.

- சர்வதேச வர்த்தகம்
- கடன் மற்றும் நிவாரணம்
- பொருளாதார அபிவிருத்தி
- பாதுகாப்புத் துறை
- வேலைவாய்ப்பு வழங்கல்

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 2)**

II.

- சமமற்ற தன்மை : ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் வளங்களின் வேறுபாடு
- அனைத்து தேவைகளை தமது நாட்டிற்குள்ளெயே நிறைவேற்றிக்கொள்ள முடியாமை
- மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்து கொள்ளல்
- போக்குவரத்து, தொடர்பாடல் விருத்தி
- நவீன தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வதன் அவசியம்
- அனர்த்தங்கள் மற்றும் இடர்களின்போது நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளல்
- அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரத் தொடர்புகளை விருத்தி செய்தல்

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

III. (அ)

- பொதுச்சபை
- பாதுகாப்புச்சபை
- செயலகம்
- சர்வதேச நீதிமன்றம்
- நம்பிக்கைப் பொறுப்பாண்மைச் சபை
- பொருளாதார மற்றும் சமூக சபை

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள் - புள்ளிகள் 2)**

(ஆ)

(அ) இல் குறிப்பிட்ட நிறுவனங்களின் பணிகள் **மூன்றை** சுருக்கமாக விளக்கியிருக்க வேண்டும்.

**பொதுச்சகை – அதிகாரம் மற்றும் பணிகள்**

ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு அமைவாக முன்வைக்கப்படும் எந்தவொரு விடயம் குறித்தும் கலந்துரையாடி பரிந்துரைகளை முன்வைத்தல்.

பாதுகாப்புச் சபை உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

நிறுவனத்தின் வரவு – செலவு திட்டத்தை பரிசீலித்தல் … போன்றவாறு

**பாதுகாப்புச் சபை – அதிகாரம் மற்றும் பணிகள்**

சர்வதேச சமாதானத்தையும் ஒற்றுமையையும் பேணல்

சர்வதேச கிரச்சினைகளுக்கு ஏதுவாக அமையும் சகல காரணிகளையும் ஆராய்தல்
அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான உடன்படிக்கைகளையும் கருத்துகளையும் முன்வைத்தல்

ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல்

ஆயுதப் பாவனைகளைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளல்

**நம்பிக்கைப் பொறுப்பாண்மைச் சபை - அதிகாரம் மற்றும் பணிகள்**

வநிருவகிக்கின்ற அதிகார சபையினால் சமர்பிக்கப்படும் தீர்மானங்களை கருத்திற்கொள்ளல்

நிருவகிக்கின்ற பிரதேசங்களில் மக்களின் முன்னேற்றத்தை ஏற்படுத்தல்
சுயாட்சி நிருவாகம் மற்றும் சுயாதீனத்தை நோக்கி வருவதற்கான பழக்கப்படுத்தல்.

**சர்வதேச நீதிமன்றம் - அதிகாரம் மற்றும் பணிகள்**

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் ஏனைய நிறுவனங்களுக்கு நீதி ஆலோசனை வழங்கல்.
அங்கத்துவ நாடுகள் மூலம் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்தல். அங்கத்துவ நாடுகள் முன்வைக்கும் முறைப்பாடுகளுக்குரிய விசாரணைகளில் பங்குபற்றுவதாயின் சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்கச் செய்தல்.

**செயலகம் - அதிகாரம் மற்றும் பணிகள்**

அமைப்பின் ஆண்டறிக்கையினை தாயாரித்து முன்வைத்தல்
ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையை நிருவகித்தல்
பிரச்சினைத் தீர்வின் போது சமாதானத் தூதுவனாகத் தலையிடுதல்
ஐக்கிய நாடுகளின் விடயங்களுக்குக்கேற்ற வகையிலான சர்வதேச மாநாடுகளைக் கூட்டுதல்
குடியேற்ற சேவைகளைக் கொண்டு நடாத்துதல்

**(புள்ளிகள் 3)**

07.

I.

- கண்டியச் சட்டம்
- தேசவழமைச் சட்டம்
- முஸ்லிம் சட்டம்

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்கள் - புள்ளிகள் 2)**

II.

- உயர் நீதிமன்றம்
- நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்
- மனித உரிமைகள் ஆணைக்குழு
- அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

III. (அ)

- சுயாதீன நீதித்துறை செயற்படல்
- சட்டம் பற்றிய தெளிவினை சகல பிரசைகளும் பெற்றிருத்தல்
- சட்டம் பற்றிய அறியாமை குற்றத்தில் இருந்து விடுபடுவதற்கான காரணமாகக் கருதாமை நேர்மையாகவும் தாமதமின்றியும் நீதியைப் பெற்றுக்கொடுத்தல்
- தனிநபர்களின் அந்தஸ்து, பதவி, செல்வம் போன்ற காரணங்களின் அடிப்படையில் சட்டம் செயற்படாதிருத்தல்
- சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படல்
- நீதிபதிகளின் தீர்ப்புகளில் புறச் செல்வாக்குகள், தலையீடுகள் இல்லாதிருத்தல்.

**(இதில் ஏதேனும் மூன்று விடயங்கள் - புள்ளிகள் 3)**

(ஆ)

- (அ) இல் குறிப்பிட்ட ஒரு விடயம் சட்டத்தின் மேன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ள சமூகத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை சுருக்கமாக எழுதியிருக்க வேண்டும்.

**(புள்ளிகள் 3)**